அருகிலுள்ள கிறிஸ்தவப் புத்தகக் கடைக்குச் செல்லும்போது, நல்ல ஒரு ஆவிக்குரிய புத்தகம் விற்பனைக்கு இல்லாததைக்குறித்து, நீங்கள் நடுங் கிடக்கூடும். அந்த உரிமையாளர் ஒருவேளை உங்களிடம் பொருளாதாரத்தின் பங்கை தேவைகளின் மத்தியில் எப்படிக் கொடுக்க முடியும் என்பதைத் தெளிவாக விளக்கலாம். ஆனால், துயரமாக, பங்காளிகளின் பசியார்வத்தை இது பிரதிபலிக்கிறது. வேதாகமத்தைப் பெரிதாகவே புறக்கணிக்கின்ற போது, எப்படி அங்கே ஆவிக்குரிய பசிதாகம் இருக்கும். வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்தை நம் மனநிலை அல்லது மனுஷீக சலனமோ தீர்மானிக்கும்போது, எப்படி ஆவிக்குரிய வாஞ்சைகளையும் விளைவுகளையும் கடைபிடிப்பது அல்லது உலகத்துக்கான தேவைகளில் இருக்கும்போது, மீதமான நேரங்களே இருக்கிறது.

என் பிரியமான சிநேகிதர்களே, தேவையானது ஒன்றே. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மார்த்தாளைக் கனிவாக சிட்சித்துபோல, நாமும்கூட இவ்வுலகின் தடையான காரியங்களை மாற்றி மேற்கொள்ளவேண்டும். மரியாள், இயேசுவின் பாதத் தருகே உட்கார்ந்து அவரது வார்த்தைகளைக் கேட்டதுபோல, செய்வதே நாம் செய்யக்கூடிய தேவையான ஒன்று. (லூக்கா 10:42). நமது கர்த்தரின் வார்த்தை களை நாம் நினைவுகூருவோம். ‘நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.‘ (யோவான் 6:63ஆ). நம் மிடத்தில் மீதமாய், சரிபார்க்கும்படி நம் சொந்த வாழ்க்கையிலே பரிசோதிப்போம். வேதவசனங்களை உண்மையோடும் கரிசனையோடும் தியானிக்கும்போது, சொல்லி முடியாத மகிழ்ச்சியைக் கொண்டு வரும். வேதவசனங்களில் மூழ்கியிருப் பதைப் பார்க்கிலும் தேவனிடத்திலே காத்திருப்பது, வேறெந்த செயல்முறையைக் காட்டிலும் மேலானது. ‘என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான். என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான். கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான்.‘ (நீதிமொழிகள் 8:34, 35). தேவனுடைய கதவு நிலையருகேயும், வாசற்படியிலும் காத்திருக்கும் மனிதன் வேதவசனங்களை விசுவாசத்தோடும் எதிர்ப்பார்ப்போடும் வாசிக்கிறான்.

இந்த முக்கியமான தூய பழக்கத்தை பாராட்டுவதோடு, எப்படி சிரமத்தோடு கடைபிடிக்கவும் மாம்சத்தை மேற்கொள்ளவும், தூய ஒழுக்கத்தை வளர்க்கவும் எதிர்பார்க்கப்படுகிறோம். ஆகவே, ஒரு வேளை நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு எந்தத் திட்டங்களையும் பின் பற்றாத பட்சத்தில் இந்தத் திட்டத்தை உங்களுக்கு அளிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எனது விருப்பம் என்னவெனில், புதிய வருடத்தின் முடிவில், தேவன் உங்களுக்கு கிருபையாக அருளும் ஆவிக்குரிய ஆதாரங்களை வீணடித்த காரியங்களுக்காக மனம் வருந்த வேண்டிய அவசியமில்லை. கெட்ட குமாரனைப் பற்றி இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது, - அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்..... எல்லாவற்றையும் செலவழித்தான். (லூக்கா 15:13,14). சர்வவல்லமையுள்ள தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவானவர் நமக்கு அளிக்கின்ற கிருபையையும் அவரது வார்த்தையிலே நெருங்கிய பரிச்சயம் உடையவர்களாக மாற்றும்படிக்கும் நாம் அவரை அணுகுவது மிகவும் முக்கியமானது. ஆகவே நாம், தீர்மானத்துடன் தீவிரமாக, நன்மையான எந்த ஈவும் பூரணமுமான எந்த வரமும் ..... பிதாவினிடத்திலிருந்து வருகிறது என்றறிந்து அவரிடம் அர்ப்பணிப்போம். (யாக்கோபு 1:17). இது இரக்கங்களினாலே அளிக்கப்படும்போது, மற்றெல்லாக் காரியங்களும் இயற்கையான சாயலாயிருக்கும். ஆகவே எனது ஆலோசனை என்னவெனில், அகரவரிசை முறையின் பாடலான சங்கீதம் 119 உங்கள் வாஞ்சையைநிறைவேற்றும் திட்டத்தை விசேஷித்த மற்றும் தனிப்பட்ட ஜெபங்களிலே ஏறெடுங்கள். நம் நல்ல தேவன் உங்களுக்கு இந்த மிகவும் தேவையானக் காரியங்களில் பதிலளிக்கப் பிரியப்படுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுடைய வாழ்க்கையிலே பயனுள்ளதாக விளங்கட்டும். நீங்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை ருசிப்பதோடு நம் சொற்ப ஜீவிய காலத்தில் மீதமுள்ள நாட்களை விசுவாசத்தோடு உங்கள் உலக வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள்.

## வெஸ்ட் மினிஸ்டர் பாரம்பரியம்

**The Westminster Tradition**
FOR THE ADVANCEMENT OF THE REFORMED FAITH

**விசுவாச சீர்திருத்தலின் முன்னோடிகளுக்கானது.**


---

*© 2011 எலியா தாமஸ் சாக்கோ*
வெளிநாட்டில் பிரசுரிக்கப்பட்டு, அனைத்து தேவ ஆலோசனைக் குழுவிற்கும் அறிக்கையிடுவதைத் தவிர்ப்பது இல்லை.
அச்சிடப்பட்டப் பிரதிகளுக்கு, தயவுசெய்து மின்னஞ்ல் அனுப்பவும்
*westminster.tradition@gmail.com*

**இந்தப் பிரசுரத்தின் எந்தப் பகுதியையும் திருத்தவோ, அழிப்பதோ அல்லது மாற்றுவதோ கூடாது.**

# பாராட்டத்தகும் ஒரு பரிசுத்தமான ஒழுங்குமுறை

**ஒரு நித்திய விளைவின் அளவிற்கடங்காத ஆசீர்வாதங்களையும் மகிழ்ச்சியான அறுவடையையும் பெற்றுக்கொள்ள அத்தியாவசியமானது.**




**ஒரு வருடத்திற்குள்ளாக வழக்கமுறைத் திட்ட அளவின்படி, முறையாகவும், முழுமையாகவும் வேதாகமத்தை வாசிக்கும்படியாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

**எலியா தாமஸ் சாக்கோ**

இது ஒரு நித்திய விளைவின் அளவிற்கடங்காத ஆசீர்வாதங்களையும் மகிழ்ச்சியான அறுவடையையும் பெற்றுக்கொள்ள அவசியமானது. ஒரு வருடத்திற்குள்ளாக வேதாகமத்தை முறையாகவும், முழுமையாகவும் வாசிக்கும் படியாக இது ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு முறையான வேதவாசிப்பை உங்களுக்கு மீண்டுமாக அறிமுகம் செய்வதில் பெருத்த மகிழ்ச்சியடைகிறோம்.

ஒரு வருடத்திற்குள்ளாக முழு வேதாகமத்தையும் வாசிக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம் தேவபக்தியுள்ள முன்னோர்கள் அனுபவித்ததும் நேசித்ததுமாயிருக்கிறது. நீங்கள் இந்த முறைத்திட்டத்தோடு பரிசுத்தமான வார்த்தைகளோடு உள்ள அறிமுகத்தை அதிகரிக்க உதவுகிறது. அநேக காரணங்கள் உண்டு. ஒருவரது ஆவிக்குரிய பற்றாக்குறைகளயும், உயிரற்ற வாழ்வினையும் ஒருவேளை, கிருபையின் புறக்கணிப்புமே, வேதத்தை வாசிப்பதற்கும் தியானிப்பதற்கும் மிகவும் அடிப்படையான மற்றும் பிரதானமுமான பிரச்சனையாயிருக்கிறது. நான் இதை ஒத்துக்கொள்ளுகின்ற வேளையில், பெரும்பாலான பிரச்சனை ஒழுங்குமுறையைச் சார்ந்ததாகவே இருக்கிறது, வேண்டுமென்றே தவற விடுகிறதில்லை. என்ற போதிலும் ஆத்துமாவிற்கு இழைக்கப்படும் தீங்கும் சேதமும் ஒன்றே. வேதத்தின் உபயோகத்தையும் அணுகுமுறையைத் தாறுமாறுகளுடன் கவனக்குறைவாகப் பின்பற்றும்போது, நாம் வாழ்கின்ற வாழ்வு பொருத்தமற்றதாயிருக்கும்.

இந்த வேதவாசிப்பின் ஒழங்குமுறையை பரிந்துரைச் செய்வதின் பிரதான நோக்கம் என்னவெனில் முழு வேதாகமத்தையும் ஒரு வருடத்திற்குள் ஒருங்கிணைத்து வாசிக்க உதவுகிறது. அனுதினமும் வேதத்தை வாசிக்கும்படி யான தியான பயிற்சியையும் முறையோடு கடைபிடிக்க இது உதவுகிறது. இவைகளை நீங்கள் இணையாகக் கைக்கொள்ளும் போது, நீங்கள் மேற்கொண்டிருக்கும் உன்னதத் தீர்மானத்தை நிறைவேற்றாதபடிக்கு உங்களைப் பாவத்தின் வலிமையான கட்டுகளிலிருந்து வெளிக்கொணர முடியும்.

இந்த ஆவிக்குரிய பயிற்சியை முன்னுரிமையோடு நாம் ஆரம்பிக்கும்போது, தடைகளின் தாக்கங்களை உணர்ந்துகொள்ள முடியும். என்றபோதிலும், நம் ஆத்துமா, ஆவிக்குரிய ஊட்டங்களையும் நாம் எவ்வாறாக கிருபையை அனுகூலப்படுத்துகிறோமோ என்றும் குறிப்பாக வேதத்தை வாசிக்கும்படியாக அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. நாம் நேரத்தை ஆதாயப்படுத்துவதுடன், நித்தியத்திற்கும் கணக்கு ஒப்புவிப்பவர்களாயுமிருக்கிறோம், ஆனால் அந்தோ, உண்மையாதெனில், அநேகர் பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும்வாசிக்கும்படியானதேவையைசெயல்படுத்துவ தில்லை. தேவ வார்த்தையைக் குறித்து, நம் முன்னோராகிய யோபு சொல்வதென்னவென்றால், - ‘அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்.‘ (யோபு 23:12ஆ). அனுதினமும் தேவ வார்த்தைகளை வாசிப்பதின் மூலம் மகிழ்ச்சியை நிலைவரப்படுத்துவது நமக்கு எத்தனை அவசியமாயிருக்கிறது. சில போதகர்களை எனக்குத் தெரியும், பழைய ஏற்பாட்டு வேதப்பகுதியிலிருந்து எதிர்பார்ப்போடு பிரசங்கிப்பது அவர்களுக்கு அச்சத்தைக் கொண்டு வருகிறதாயிருக்கிறதென்றால் அவர்கள் ஆயத்தின் கீழுருக்கும் சபை மக்களுக்கு எப்படி யிருக்கும். உதாரணமாக, அவர்கள்அறிக்கையிடும்போது பகிர்ந்தளிக்கும் தவற்றை வேதீக ‘(அவர்களது சபைகளின்) அடிப்படைத் தத்துவங்கள்...(5) அதனது சட்டங்களும் தத்துவங்களும்: புதிய ஏற்பாடும் அது மாத்திரமே.‘ (இரத்தத்தின் பாதை: கிறிஸ்தவர்களை நூற்றாண்டுகளாகப் பின்பற்றுவது அல்லது கிறிஸ்துவின் காலங்களிலிருந்து தற்காலம் வரை பாப்திஸ்ட் சபைகளின் வரலாறும் அதின் நிறுவனரும் - ஜே. எம். காரோல் 1931) சில வேதாகமக் கல்லூரி மாணவர்களை எனக்குத் தெரியும், அவர்கள் அறியாமையிலிருக்கிற வேதாகம உண்மையின் அடிப்படைகளை வைத்துக் கொண்டு, பாடப்பகுதியிலுள்ள எபிரேய மற்றும் கிரேக்கமொழிகளின் திறமையைக் கூட்டிச் சேர்க்க முயற்சிக்கின்றனர். வேதாகம செமினரிகளிலுள்ள வேதாகம வல்லுநர்களை எனக்குத் தெரியும். அவர்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்பதை உண்மையாகவே நம்புவதில்லை. நிச்சயமாகவே, நம்பிக்கையற்ற வேரானது, கிளையாகி, பரிசுத்த சாசனத்தை வாசிக்கும் பழக்கத்தை விட்டுவிடச்செய்கிறது. உண்மையாகவே கடைசி நாட்கள் வந்திருக்கிறது. உபத்திரவக்காலங்கள் நிலவரப்படுகிறது. மக்கள் எப்படியாக இருக்கவேண்டும் என்று பவுல் சொல்லுவதென்னவென்றால், ‘தேவப் பிரியராயிராமல் சுகப்போகப்பிரியராயும்‘ (2 தீமோத்தேயு 3:4ஆ). ஆனால் நாம் அந்த அற்புதமானதும் உறுதியுமான மாற்று மருந்தையும் மறந்து போக வேண்டியதில்லை. பவுல் தீமோத்தேயுவுக்கு சிபாரிசு செய்வதினால் தனது உள்ளம் பயத்தினால் உறைந்து போகாதபடிக்கும் கிறிஸ்தவத்தை வசப்படுத்தும் விசுவாச எதிர்ப்புக்கொள்கைகளை மேற்கொள்ளும்போது, ‘பொல்லாதவர்களும் எத்தர்களு மானவர்கள் மோசம்போக்குகிறவர்களுமாகவும், மோசம் போகிறவர்களுமாகவும் மரணத்துக்கேதுவான, பரந்து கிடக்கும் ஆவிக்குரிய தொற்று நோயின் குறிப்புகளை எழுதுகிறார்.

‘நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறது மல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞான முள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவ னாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத் துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது. ‘(2 தீமோத்தேயு 3:14-17).

இங்கே தீமோத்தேயு, வேதாகமத்தோடு தான் வைத்திருக்கும் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பாருங்கள். பவுல் முழுமையான வேதாகமத்தையும் (அனைத்து வேதாகமத்தையும்) நமக்குச் சிபாரிசு செய்கிறார். அக்காலங்களில், புதிய ஏற்பாட்டின் அதிகாரப் பூர்வத்தைத் திட்டமாக நிலைவரப்படுத்தவில்லை. ஆகவே, குறிப்பாக பவுல் பழைய ஏற்பாட்டைக் குறப்பிடும்போது பவுலி டத்தில் சில சந்தேகங்கள் எழுந்தமையைக் காணலாம்.

ஒருவர் வேதாகமத்தை வாசிக்க முழுமையான ஒழங்குமுறையைப் பின்பற்றும் போது, முடிவாக குற்றஞ்சாட்டுதலுக்கான விளைவுகளைக் கண்டு பிடிக் கலாம். எப்படியாக நம் மூதாதையரானப் பெற்றோர்கள் பாவத்தின் வல்லமையினால் வீழ்ந்தனர் என்பதையும், அதின் விளைவுகளைத் தன் சொந்த வாழ்க்கையிலும் காணலாம். தனது வாழ்வில் எல்லையற்ற வளரும் முழுமைத்துவத்தின் ஆசீர்வாதமான தேவனுடைய ஆள்தத்துவங்களின் பண்புகளை உணர முடியும். மேலும் அவர், ஆழமாகப் பாராட்டும்படியாக மத்தியஸ்தரின் அந்தஸ்தைக் கொடுப்பதோடு இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட நபரின் இரட்சிப்பின் உறுதியையும், முழுமையுமான பலியாக தேவனே தமது மக்களுக்கு அளித்துள்ளார். ஆகவே, தேவனுடைய கிருபையினால், அவர் தம்மைத்தாமே பலவந்தப்படுத்தி, இயேசு கிறிஸ்து வின் விலையேறப்பெற்ற இரத்தத்தை ஆர்வமுடன் அத்தாட்சியாக்கினார். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஆவிக்குரிய சலுகைகளையும் இரக்கங்களையும் நாம் அனுபவிக்கும்படி விரும்புகிறார். (எபேசியர் 1:3) இவைகளெல்லாவற்றிலும், தமது வேதப்பகுதிகளை அவரது விளக்காகவும், திசைகாட்டியாகவும் அவருக் குத் தேவையான உண்மையான திசையின் உறுதி யையும், உத்திரவாதத்தின் அளவையும் அவரது நம்பிக்கைப் பண்புகளின் நிலவையும் உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது ‘(சங்கீதம் 119:105).

வேதாகமத்தில் நம்மை நாம் ஈடுபடுத்திக்கொள்ளும் போது, ஓ எத்தனை மகிழ்ச்சி நமக்காகக் காத்திருக்கிறது. எனக்குத்தெரியும், அநேகர் தங்களை வேதாகமத்தைப் படிப்பதற்குப் பதிலாக மத சம்பந்தமான புத்தகங்களிலே ஈடுபாடு கொண்டுள்ளனர். துரவசமாக, வேதாகமத்திலே மூழ்கிருக்கும் ஆதரவாளர்கள் போப்பின் தத்துவங்களை மிக நுட்பமாக நுழைப்பதினால் அவர்கள் சோர்வடைகின்றனர். வேதாகமத்தை தியானிக்கும் முதன்மையான இடத்தை, எந்தக் காரியமும் எடுத்துக் கொள்ள முடியாது. முதலாவதாக, வேதாகமத்தை நாம் வாசிக்காத பட்சத்தில் எப்படி நாம் அதைத் தியானிக்கமுடியும்.